**செய்தி வெளியீடு எண்:361** **நாள் :21.07.2015**

## சென்னை மாநகரில் குடிநீர் விநியோகம் குறித்து உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் 20.07.2015 ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் அன்று 20.07.2015 சென்னை மாநகர குடிநீர் நிலவரம் குறித்தும், குடிநீர் விநியோகத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து குடிநீர் வாரிய அலுவலர்களுடன் சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

குடிநீர் ஆதாரங்களின் தற்போதைய நீர் இருப்பு விவரம், இருப்பில் உள்ள நீரைக் கொண்டு மழைக் காலம் வரை எவ்வாறு சென்னை நகரமக்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்கிற விவரம் குறித்தும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார். போதிய மழையின்மையின் காரணமாக ஏரிகளில் குறைவாக நீர் இருப்பு உள்ளதாலும், ஆந்திராவிலுள்ள தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் நீர் கொடுக்கும் ஏரிகளான ஸ்ரீசைலம், சோமசீலா, கண்டலேறு ஆகிய ஏரிகளின் நீர் இருப்பு மிகவும் குறைவாக உள்ளதாலும் இத்திட்டத்தின் கீழ் தற்போது நீர் பெற இயலாத நிலையை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்தும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

சராசரியாக பெய்துவரும் மழையின் அளவைக் கொண்டு சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளை நிரப்புவதற்கு அந்த ஏரிகளின் நீர்பரப்பு பகுதிகளில் உள்ள கால்வாய்களை சுத்தப்படுத்தும் பணிகளை மேற்கொண்டால் மேற்கூறிய ஏரிகளில் முழுவதுமாகநீர் பெருக்க

இயலுமா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த சிக்கலான குடிநீர் பற்றாக்குறை தருணத்தில் மண்டலங்களில் உள்ள பொறியாளர்கள் மற்றும் வாரிய அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து விழிப்புடன் செயலாற்ற வேண்டும் என அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

பொது மக்களும் குடிநீர் பற்றாக்குறையினைக் கருத்தில் கொண்டு தாங்கள் உபயோகப்படுத்தும் நீரின் அளவை வீணாக்காமல் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தற்போது இருப்பில் இருக்கும் நீரை அனைத்து மக்களுக்கும் சமச்சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்திட அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார். கூடுதலாக நீர் ஆதாரங்கள் உள்ள இடங்களை கண்டறிந்து அங்கிருந்து பெறப்படும் நீரினை சென்னை மாநகர மக்களுக்கு குடிநீர் தேவைக்காக விநியோகம் செய்திட நடவடிக்கை எடுப்பதற்கும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து சீரான குடிநீர் மக்களுக்கு கிடைக்க செய்ய வேண்டும் எனவும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திர ரெட்டி இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.பி. சந்தர மோகன், இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு. என். சந்தீப், இ.ஆ.ப., வாரிய தலைமைப்பொறியாளர்கள் மற்றும் பகுதிப் பொறியாளர்கள், உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**